# இந்துசாதனம்.

(1889)

| பத்திரக் கிரயம். | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரு | 5-00 |
| இலங்கை, இந்தியா: ,, ரு. | 8-00 |
| தொலைப்பகுதி: ,, ரு | 9.00 |
| தனிப்பிரதி: | சதம் 5 |
| முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும். | |

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| விளம்பர விகிதம். | |
|---|---|
| முதன்முறைக்கு:—ஒரு சலம் | ரு. 9-00 |
| ,, அரைக்கலம் | ரு. 4-50 |
| ,, கார்க்கலம் | ரு. 3-00 |
| அடுத்த முறைகட்கு டி விகிதங்களிற் பாதி. | |
| விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா | |

புத்தகம்—சா. } யாழ்ப்பாணம்:—விபவஹூ புரட்டாதிமீ உசுஉ, (1928 அக்டோபர் 11) வியாழக்கிழமை. { இலக்கம்—உகூ.


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
செம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றேனு
மதம்பூத்தவிநாயகன்றுள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை நான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் கீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ௦. அரைருத்தலுக்கு ரூபா க௦. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன்மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவகுரு ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டுக்களப்பு,
சிலோன்.

(M. 30.)

## மூன்று அருமைவாய்ந்த நூல்கள்.

(1) மறுபிறப்புத் தூஷண பரிகாரம்.

இது கிறீஸ்தவர்களுக்கும் சைவர்களுக்குமிடையில் மறுபிறப்பு விஷயமாக நடந்ததருக்க முடிவு இதுவோர் அறிவு பயக்கும் நூல். —192 பக்கங்களையுடையது, விலைசதம் 50.

(2) மறுபிறப்புத் தூஷண பரிகாரக் கிலிகோலபஞ்சனம்.

இது கிறீஸ்துமதம் மறுபிறப்புக் கொள்கையுடையதோ அன்றோ? என்பதுபோன்ற பல அரிய விஷயங்களாக யாக்கோபுவுக்கும் ஞானசேகரனுக்குமிடையில் நிகழ்ந்த மேலான தருக்க முடிவு.

—57 பக்கங்களையுடையது. விலைசதம் 25.

(3) கொலைமறுத்தல் பிரசினோத்தரம்.

—விலைசதம் 5.

மேற்படி நூல்கள் விலைப்படும் பிரதான இடங்கள்.

(1) சி. க. இராஜையன், மணல் தறை ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

(2) S. S. சண்முகநாதன் புத்தகசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(3) சோதிடப்பிரகாச யந்திரசாலை, கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 111.)

## யாழ்ப்பாணம்
## கீரிமலை மூர்த்திதல தீர்த்தமகிமை.

நகுலமுனிவின் கீரிமுகத்தை மாற்றியதும், திசையுக்கிரசோழன் மகள் மாருதப்பிரவல்லியின் குன்மவலியையும் குதிரைமுகத்தையும் நீக்கியதும், அர்ச்சுனன் நளன் முதலிய அரசர்களும் வந்து தீர்த்தமாடும் பெரும்பேறுபெற்றதும் யாழ்ப்பாணத்தில் மூர்த்திதலம் தீர்த்தம் ஒருங்கே யமையப்பெற்றதுமான இந்தக் கீரிமலைத் தலத்திற் பழைய கிணறு ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட ஸ்ரீமந் நாராயணமூர்த்திக்குத் திருக்கோயிலமைத்து அதிற் பிரதிட்டைசெய்து பூசைநடந்து வருகின்றது. டி கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட முருகமூர்த்திக்கு, அதன் பக்கத்தே ஒரு திருக்கோயிலையும், அதற்கு நேர்வடக்கில் வெள்ளாறும் பன்னீர்மரமும் நிற்கின்றமலைச்சாரலில் சிவலிங்கப்பெருமானுக்கு ஸ்ரீ காசியில் எழுந்தருளியிருக்கும் விசுவநாதசுவாமிக்கு அர்ச்சிப்பதுபோல ஆசாரசீலர்கள் தாமே அர்ச்சிக்கத்தக்கதாக ஒருதிருக்கோயிலையும் அமைத்து அவைகளிலே டி மூர்த்திகளைப் பிரதிட்டைசெய்யவேண்டியிருத்தலினால் அடியார்கள் இச்சிவபுண்ணியத்தில் கலந்து தங்களாலியன்ற பொருளுதவி செய்து அருள்பெறுமாறு வேண்டுகின்றேன்.

க. த வடிவேலுமேஸ்திரி,
வல்வெட்டித்துறை

(Q 113.)

## தமிழ் உபாத்தியாயர்கள் தேவை.

செரம்பான் விவேகானந்தவித்தியாசாலைக்கு ஒரு உபாத்தியாயரும் ஒரு உபாத்தியாயினியும் தேவை இருவரும் புருஷனும் மனைவியும், ஒருவராவது ஆங்கில மூன்றாம் வகுப்புவரை படிப்பிக்கக் கூடியவராயும் இருந்தால் உத்தமம்.

இருவருளொருவர் அரசினர் தராதரப்பத்திரம் பெற்றவராயும் உபாத்தியாயினி தையல் ஐந்தாம் வகுப்புவரையிற் படிப்பிக்கக் கூடியவராயும் இருவரும் சைவசமயிகளாயும் இருத்தல் வேண்டும்.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்குத் தாங்கள் விரும்பும் சம்பளம் முதலியவற்றைக் குறித்து எழுதியறியலாம்.

Manager,
Viveckananda Tamil School,
Serempan,
F. M. S.

(Mis. 1304.)

## விசேஷ இனும்.

உயர்ந்த மிலிட்டேரி காக்கிட்வில் ஷேர்ட் இரண்டு பக்கமும் மேல்மூடியுள்ள பாக்கட்டும் இரண்டு தோள்களில் ஷோல்டர் பட்டையும் உள்ளது ஒன்று ரூபா 2—8. மூன்று வாங்கினால் 1 படுக்கை மப்ளர் இனும். 6 வாங்கினால் ஒரு கம்பளிப் போர்வை இனும்.

புதிய மாதிரி! விலைசரசம்!

16 முழம் இமிட்டேஷன் சரிக்கை.
தோட்டி காசிப்பூசேலை!!

இனும்! இனும்!! இனும்!!!

இம்மாதிரியான அசல் தொட்டிப்பூபோட்ட சேலை ரூபா 100, 150, 200 போட்டால் தான் கிடைக்கும்.

ஆண்களுடை 22 காரட் ரோல்ட்கோல்ட் சவுட்சர்வாதத்தில் செய்யப்பட்ட அழகுவாய்ந்த திறமான 10 வருட உத்தரவாதமுள்ள



ரோல்ட் கோல்ட் ரிஸ்லெட் கடிகாரம் வாங்குபவர்களுக்கு டி காசிப்பூ சேலை இனுமாக அனுப்பப்படும் சரியான மணி காட்டும் கடிகாரத்தின் விலை சொற்பமே. ஒரு கைப்பட்டையுடன் ரூபா 10—0—0 தான் தனியாகவாங்கினால் புடவை 1-க்கு ரூபா 5—8—0 ஒரேகாலத்தில் 6 புடவை வாங்கினால் ஒருபுடவை இதற்கு இனும் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

உடனே ஆர்டர் செய்யுங்கள்.

அசோகா அன் கோ,
வேப்பேரி போஸ்ட்,
சென்னைபட்டணம்

ASOKA & Co,
Vepery, P. O.,
Madras.

(Q 112)

## யாழ்ப்பாண ஐக்கியவியாபாரசங்கம் லிமிட்டெட்.

1918-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

பிறதேசங்களிலிருந்து
நெல்லு
அரிசி
மற்றுஞ் சாப்பாட்டுக்குரிய சகல சாமான்களும், பலவகையான சாய்ப்புச் சாமான்களும் வருவித்து விற்பவர்கள்.

இது யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்படும் பிரபலமான வர்த்தகம்.

சாமான்கள் திறமானவை.

விலை சகாயம்.

சுதேச முயற்சியைத் தைரியப்படுத்துங்கள்.

தங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

பெரிய கடையின் வடமேன் வீதிகளில் இக்கம்பெனிக் கடைகள் நடைபெறுகின்றன.

(Q. 108.)

## வெண்டிச்செய்கை.

1. முகவுரை:—இது அதிக வரும்படியைக் கொடுக்கக்கூடிய செய்கை. நன்றாகக் காய்க்கக் கூடிய பயிர். உணவுக்கு நல்ல ருசிகாமுடையது நல்ல குளிர்மையுடையது. இது பெரும்பாலும் அனேக தோட்டக்காரராற் கவனிப்புக்குக் கொண்டுவரப்படாததாற் செய்கை குறைவாகவும் விலை யதிகமாகவும் இருக்கின்றது. மலைநாட்டுப் பாகங்களிலே இது கஷ்டமின்றிப் பயிராக்கப்படுகிறது. மற்றும் காய்கறிப் பயிர்களைப்போல இதையுஞ் செய்கைபண்ணினால் அதிலாபத்தை யடையலாம் என்பதற் கையமில்லை. இதைவிட்டு ஒரு வரிலே எல்லாராலும் கவனிக்கப்பட்டுச் செய்கைபண்ணப்படுகிற பயிர்களை வருஷாவீதஞ் செய்வதில் அதிக லாபமில்லையென்பது வெள்ளிடைமலைபோற் தெளிவின் விளங்கும்.

2. நாமங்கள்:—இது தமிழில் "வெண்டி" எனவும் "ஆகாயக்கத்தரி" எனவும் இங்கிலீஷில் 'லேடீஸ் விங்கர்" எனவும் சிங்களத்தில் "ப்அண்டக்கா" எனவும் பெயர்பெறும்.

3. வகைகள்:—இதிற் பல இனங்களுண்டு. அவைகளிற் சில பெரிய காய்களைப் பயப்பனவாயும் சில இனங்கள் சிறிய காய்களைப் பயப்பனவாயும் இருக்கும். இனத்துக்குத் தக்கபடி நிறத்திலும் குணத்திலும் வித்தியாசமாயிருக்கும்; பிரதானமான இனங்கள் மெழுகு வெண்டி, வெள்ளைவெண்டி முதலியன.

4. பிரயோசனங்கள்.—(1) இதன் காய்களைப் பச்சையாகப் பிஞ்சாயிருக்கும்போது உண்ணலாம், (2) கறிசமைத்துண்ணலாம், (3) வினாக்கிரி சேர்த்து "அச்சாறு" போட்டு வைத்துண்ணலாம் (4) சொற்றுகவிட்டு விதைகளை யெடுத்து விதைக்கலாம்.

5. விளைவிக்கப்படுமிடங்கள்:—இது இந்தியாவிலும் இலங்கையிலும் அதிகமாக விளைவிக்கப் படுகின்றது. இலங்கையிலே மலைநாடுகளிலும் தென்மேல் கரைசாடுகளிலும் யாழ்ப்பாணப்பகுதியிலும் மற்றுஞ் சில இடங்களிலும் அதிகமாக உண்டாக்கப்படுகின்றது.

6. நிலம்:—மணலுங் களியுங் கலந்த பசளையதிகமுள்ள இருவாட்டிநிலம் இப்பயிருக்கு மிக ஏற்றது. உக்கிய தாபரவஸ்துக்கள் நிலத்தில் அதிகமாயிருத்தல் மிக நன்று.

7. நிலத்தைப் பண்படுத்தல்:—அடிக்கடி கொத்தி அல்லது உழுது நிலத்தை நன்றாகத் தூர்வைபடுத்த வேண்டும். நிலம் நல்ல சுத்தமாயித்தலும் வேண்டும்.

(தொடர்ச்சி ௪-ம் பக்கம்.)


சுகம் சுறுக்காயும் நிச்சயமாயுங் கிடைக்கும்.

எவ்வித நோவாயிருந்தாலுஞ்சரி,
தலைவலி
நரம்புவலி
இல்வாய்வு
துடைப்பிடிப்பு
வாதம்
சுளுக்கு
தொண்டை நோ
நெஞ்சுச்சளி
எல்லாவற்றிற்கும்

லிட்டில்ஸ் ஓரியென்டல் பாம்.

உடன் சுகந்தரும்.




43 வருடகாலமாய் அனுபோகத்தில் சிறந்த மருந்து என்று நிச்சயிக்கப்பட்டது. அது தரும் சுகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அதின் விலை ஒரு பெரிதல்ல.

மிருகக்கொழுப்புச் சேராதது.

எல்லா ஷாப்புகளிலுங் கிடைக்கும்.

(2—28) Little's Oriental Balmar and Phmaceuticals Ltd., Madras

(X. 61.)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஹு
புரட்டாதிமீ ௨௬௳ வியாழக்கிழமை

## தண்ணீர்ப் பஞ்சம்.

2

இப்பத்திரிகையின் சென்ற பிரசுரத்தில் ஊர்காவற்றுறை, இவ்வுப்பகுதியிலுள்ள சனங்கள் தண்ணீர் இல்லாமையாற் படுங் கஷ்டங்களை ஒருவாறு சுருக்கி வெளியிட்டேம். இவ்விஷயத்தை நேரிற் சென்று கண்ணாரக் கண்டு ஆராய்ச்சி செய்துவரும் வண்ணம் இங்குள்ள அபிமானிகள் இவர் சிலதினங்கட்கு முன்னர் ஊர்காவற்றுறை, காரம்பன் கிழக்கு மேற்கு, காரைநகர், சரவணை கிழக்கு, வேலணை கிழக்கு என்னுமிடங்களைப் பார்த்து, தண்ணீரில்லாமையால் குறித்த ஊரவர்கள் படுங் கஷ்டத்தைப்பற்றி ஒரு அறிக்கைப்பத்திரம் எழுதி மேற்படி பகுதியின் கௌரவ பிரதிநிதியாகிய ஸ்ரீ வை. துரைசுவாமியவர்கட்கு அனுப்பி யிருக்கின்றனர். குறித்த அறிக்கைப் பத்திரத்திற் சொல்லப்பட்ட விஷயங்களுட் பிரதானமானவைகளை இங்கேயெடுத்துக்காட்டி இதற்குச் செய்யவேண்டியதென்னவென்பதையும் யோசித்தல் நன்றாம். ஊர்காவற்றுறையைப்பற்றிக் குறித்த அறிக்கைப் பத்திரத்திற் பின்வருமாறு சொல்லப் பட்டிருக்கின்றது:

'இங்குள்ள கிணறுகளெல்லாம் முற்றும் வற்றிப்போக, இப்பொழுது சிலகாலமாக அரசினரால் ஒரு மோட்டர் லொறி மூலமாக இங்குள்ளார்க்குத் தண்ணீர் உதவப்பட்டு வருகின்றது; காரைநகரிலுள்ள ஒரு கிணற்றிலிருந்தே இந்தத் தண்ணீர் உதவப்படுகின்றதாம். இங்கே கொடுக்கப்படும் தண்ணீர் போதியதாகக் காணப்படவில்லை; பருத்தியடைப்பில் வசிக்குஞ் சனங்களுக்குத் தண்ணீர் உதவப்படுகின்றதேனும் இவ்வளவென்ற நியதியில்லை; தண்ணீர் பெறுதற்கு உத்தரவுச் சீட்டு வைத்திருக்கும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒன்றைவிட்டொருநாளுக்கு ஒவ்வொருகுடம் தண்ணீர் கொடுக்கப்படுகின்றது; ஆனாற் சிறு குழந்தைகளைக் கணக்கிற் சேர்க்கவில்லையென்று அங்குள்ளார் சொல்லுகிறார்கள். தண்ணீர் போதாமையால் இங்குள்ளார் தவிக்கும் தவிப்புப் பெரும் பரிதாபமானது; ஒரு வீட்டில் 6 பேர் இருந்தாலும் அவர்களுக்கும் ஒரு குடந் தண்ணீர் தான் உதவப்படுகின்றது. ஊர்காவற்றுறை கிழக்கில் ஒரு குடும்பத்தில் மூன்றுக்கு மேற்பட்ட தொகையினர் இருப்பின் அவர்களுக்கு 2 குடம் தண்ணீர் உதவப்படுகின்றது; ஆனாற் பருத்தியடைப்பில் இப்படியில்லை; இங்குள்ள தபாற் கந்தோருக்குச் செல்லும் தெருவோரங்களில் இருப்போருக்குப் போதிய தண்ணீர் கொடுக்கப்படுகின்றதென்று சொல்லலாம். இவர்களுக்குத் தினந்தோறும் ஒவ்வொரு குடம் தண்ணீர் கொடுக்கப்படுகின்றது. ஊர்காவற்றுறையில் வசிப்போரின் தொகை 2361 ஆகும்.

ஊர்காவற்றுறை விஷயமாக யாம் சொல்லத்தக்கதொன்றுளது; அரசினர் ஒன்றைவிட்டொருநாளைக்குத் தண்ணீருதவுவதை விடுத்து எல்லார்க்கும் ஓரேவகையாய்ப் பாகுபாடின்றிச் சமயலுக்காயினும் போதிய தண்ணீர் உதவுதல் வேண்டும். அங்குள்ளவர்களுள்ளும் தண்ணீர்த் தேவை குறைவாகவுள்ள குடும்பத்தார் அதிகமாக வேண்டியவர்களுக்குச் சிறிதாயினும் பாகஞ்செய்து உதவுதல் பெருந்தன்மையாகும். காரம்பன் கிழக்கு மேற்கு விஷயமாக அறிக்கைப் பத்திரத்திற் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது:

"இந்தப்பகுதி சுகாதாரசங்க எல்லைக்கு அப்புறமிருக்கின்றது; நீர் நிலைகளெல்லாம் வற்றிப்போயின. ஆனால் வேறிடத்திலிருந்து இங்குள்ளார்க்குத் தண்ணீர் உதவப்படுவதில்லை; இங்குள்ள சனங்கள் காரைநகர், செரிஞ்சிமுனை என்னுமிடங்களுக்குப் போய்த் தண்ணீர் எடுத்து வருகிறார்கள்; வண்டிமாடுகள் சொந்தமாக வைத்திருப்பவர்கள் தண்ணீருக்கு அதிக கஷ்டப்படவில்லை; இல்லாதவர்களின் நிலைமை பெரிதும் பரிதாபமானதாம். இந்தப்பகுதியிலுள்ள சனங்களின் தொகை 1609 ஆகும்."

இந்தப்பகுதியிலுள்ளவர்களுக்கும் அரசினர் இச்சமையம் உதவிசெய்தல் வேண்டும்; வண்டிமாடுகள் சொந்தமாகவுள்ளவர்கள் தங்களுக்குத் தண்ணீர் எடுத்துவருவதுடன் இல்லாத மற்றையோர்க்கும் தண்ணீர் உதவுதல் பெரும் புண்ணியமாகும்; மேலும் அயலவரென் றிருப்போர் செய்யவேண்டிய கடமையுமாகும்; சரவணை கிழக்கு வேலணை கிழக்கு என்னும் பகுதிகளின் நிலைமையைப்பற்றி அறிக்கைப் பத்திரத்திற் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது.

"இந்தப்பகுதிகளிலும் தண்ணீர்ப்பஞ்சம் அதிகம்; சில கிணறுகளில் மாத்திரம் தண்ணீர் மொள்ளுதல் முடியும்; ஆனால் இக்கிணறுகளும் அதிக தூரத்திலிருக்கின்றன; இங்குள்ள ஆண்களும் பெண்களும் தண்ணீர் மொள்ளும்படி தினந்தோறும் அரைமைல் ஒருமைல் தூரத்திற்குப் போய்க் கொண்டு வருகின்றார்கள்; சரவணை கிழக்கில் வசிப்போர் தண்ணீரின்பொருட்டு காரைநகருக்குப் போகின்றார்கள்; சரவணை கிழக்கிலுள்ள சனங்களின் தொகை 1590; வேலணை கிழக்கிலுள்ள சனங்களின் தொகை 2600."

ஏறக்குறைய 8160 சனங்கள் இப்பொழுது தண்ணீரின்றித் தவிக்கின்றார்கள்; இனி இக்கப்பகுதிகளிலுள்ள ஆடு மாடுகளின் நிலைமை எப்படியென்று சொல்லாமலே புலப்படும் இதற்குமுன் இப்பகுதிகளில் இத்தவிதமான தண்ணீர்ப் பஞ்சம் வந்ததில்லையென்று அங்குள்ள முதியோர் சொல்லுகின்றனர்; இந்தச் சமையத்தில் அரசினர் மணியம் உடையார் விதானை முதலிய தலைமைக்காரர், கிராமசங்கத்தார், அபிமானிகள், ஆங்காங்கு மோட்டர் பஸ்வண்டிகள் வைத்திருப்போர், தண்ணீர்ப்பஞ்சமில்லாத அயலூர் வாசிகள் முதலிய எல்லாரும் இவர்களுக்குத் தண்ணீர்த் தானஞ் செய்தற்கு முற்பட்டு நிற்றல்வேண்டும்; அரசினர்தான் முழுப்பொறுப்புமுடையவர்களென்றுவிட்டு ஊரவர்கள் வாளாவிருத்தல் முடியாது மேலும் ஆடு மாடுகளும் மற்றுஞ் சீவபிராணிகளும் தண்ணீர் விடாயால் மாண்டு போகாவண்ணம் குளம் கேணி துரவு என்னுமிவைகளைச் சுகாதார சங்கத்தார் ஆழமாகத் தோண்டுவித்து நீரூற்றுப் பெருகச் செய்தல் வேண்டும். இச்சங்கடங்களெல்லாம் இன்றைக்கு மழை பெய்தாலும் இல்லாதொழியுமாம்; மழைக்கோலமும் காணப்படுகின்றது இவைகளெல்லாவற்றிற்கும் மேலாக எல்லாம் வல்ல கடவுளின் திருவருளைச் சனங்கள் வேண்டிநிற்றல்வேண்டும். அந்த இறைவன் சிறிது கடைக்கணித்தால் எக்குறையும் அகன்றுவிடும்,

"திங்களஞ்சடையெம்பிரான் திருவருள்பெருக்
பொங்குதிங்கள் மும்மாரியும்பொழிக
எங்கள்நாயகன் திருக்கூத்தொண்டர்கடேற
தங்குநான்மறைச்சைவநானிலாங்கறந்தழைக"

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்.)

பள்ளிக்கூடத்திலும் விடுதிச்சாலையிலும் நான் போய்ச்சேர்ந்த நாள் தொடக்கம் நாலு ஐந்து தினங்களாக வீட்டில் எண்ணமென் மனசிற் குடிகொண்டிருந்தது; படிப்பில் மனஞ் செல்லவில்லை; ஒருவாரமாக நான் எவரோடும் அதிகம் வார்த்தையாடாமலிருந்தேன்; ஒருநாள் எங்கள் வகுப்பு உபாத்தியாயர் என்னைப் பார்த்து "கெடுக நீ புதுப்பையனாகவிருக்க முடியாது; நீ வழக்கமாயப் படிக்கவேண்டும் என்று சிறிது கடிந்து சொன்னார்; அவர் சொல்லியது எனக்குச் சிறிது மனவருத்தமாயிருந்தது; நான் அவர் சொன்ன நேரந் தொடக்கமாக வீட்டுயோசினையை விட்டுக் கிரமமாகப் படிக்கத்தொடங்கினேன்; என் வகுப்பில் 28 பிள்ளைகள் வரையிலுண்டு; இவர்களுள் ஊக்கத்துடன்படிப்பவர்கள் நாலு ஐந்து பேர்கள் என்றே சொல்லலாம். எஞ்சிய பிள்ளைகளுட்சிலர் படிக்கக்கூடிய விவேகிகளாயிருந்தாலும் அவர்களை மற்ற மூடப்பிள்ளைகள் படிக்க விடமாட்டார்கள்; அவர்களுள் ஒரு சில பிள்ளைகளுக்குப் படிப்பென்றால் நஞ்சுபோலவிருக்கும்; படிப்பைவிட வேறு என் செய்யச் சொன்னாலும் மிக்க சந்தோஷத்துடன் செய்து விடுவார்கள்; படிக்கிற பிள்ளைகள் மீது இந்தப் படியாத பிள்ளைகள் ஆத்திரங் கொள்ளுவார்கள்; அவர்களைப் புத்தகப் பூச்சியென்று பரிகாசஞ் செய்வார்கள்; எங்கள் வகுப்பு உபாத்தியாயருக்கு 52 வயசு வரையிலிருக்கும்; சிறிது பெருத்த தேக முடையவர்; அலுப்போடு கூடியவர்; அவர் அதிகம் கோபித்து அடிக்கும்படி பிரம்பெடுத்தாலல்லாமல் அவருக்குப் பிள்ளைகள் பயப்படுவதில்லை; வகுப்பிற்கு அவர் வந்தவுடன் பிள்ளைகளின் வழக்குகளை விசாரிப்பதில் அரை மணி நேரம் ஒரு மணி நேரம் போய்விடும்; அதன் பின்தான் படிப்பிக்கத் தொடங்குவார்; இதற்கிடையில், படிக்கும் பிள்ளைகள் ஏதும் கதை சொல்லும்படியாக அவரைத் தூண்டுவார்கள்; முதல் அவர் அதற்கு இணங்கமாட்டார்; ஆனால் உபாயமான இந்தப் பிள்ளைகளோ ஏதும் ஒரு சந்தர்ப்பத்தில் தங்களுக்கு விஷயம் விளங்காததுபோல் நடித்து, விஷயத்தை விளக்கப்படுத்தும் போது அந்த விஷயத்தில் ஒரு கதையைக் கொளுவித் தொடங்கிவிடுவார்கள்; இவரும் கருமத்தை மறந்து கதை சொல்லி முடிப்பார்; சில சமையங்களில் படிக்கப் பிரியமில்லாத பிள்ளைகள் சிலர் உபாத்தியாயரைப்பார்த்து "ஸேர், நீங்கள் அன்று ஒரு பாட்டுப் படித்தீர்கள் மிக நல்லாயிருந்தது; இப்படிப் பாடுவீர்களென்பது எங்களுக்குத் தெரியாது; அந்தப் பாட்டை ஒருமுறை பாடுங்கள் கேட்டோம்; நீங்கள் பாடினால் நாங்களும் பார்த்துப் பழகிவிடலாம் என்பார்கள்; நரியின் சொல்லைக் கேட்டு வெண்ணெய் கௌவி வைத்திருந்த காக்கை பாடத் தொடங்கினாற் போல எங்கள் உபாத்தியாயர் உடனே பாடத் தொடங்கிவிடுவார்; உண்மையாக அவர் பாடக் கூடியவரல்லர்; பாடும்போது கேட்கப் பரிதாபமாயிருக்கும்; ஆனால் பாடுவதிலே தாம் திறமைபடைத்தவனென்ற ஒரு வீணான எண்ணம் அவருள்ளத்திற் குடிகொண்டிருந்தது; தண்ணீர் குடிப்பதற்குச் சலவிமோசனஞ் செய்தற்கு போதற்கு உத்தரவு கேட்டால் உபாத்தியாயர் போகவேண்டாமென்று தடுத்து விடுவார்; இதனை அறிந்த பிள்ளைகள் அவர் அதிக யோசனையோடு இருக்கும் போது இல்லையேல் ஏதும் ஒரு விஷயத்தை மற்றைப் பிள்ளைகளுக்கு விளக்கப்படுத்திக்கொண்டிருக்கும் போது உபாத்தியாயரிடம் கேட்க அவர் பராமுகமாய்த் தலையசைப்பார்; இவர்கள் அந்தத் தலையசைப்பையே அநுமதியாகக் கொண்டு போய்விடுவார்கள்; இந்தப் பிள்ளைகளுடன் நானும்ஒருநாள் தண்ணீர் குடிக்கவென்று போனேன்; எனக்கு உண்மையான தாகமிருந்தது; ஆனால் மற்றைப் பிள்ளைகள் கிணற்றடிக்குத் தானும் போகவில்லை; மெல்ல அயல்வளவுக்குப் போய் அங்கு நிற்கும் இலந்தைமரங்களுக்குக் கல்லாலெறிந்து பழம் வீழ்த்திப் பொறுக்கித் தின்னத் தலைப்பட்டார்கள்; அவர்களுள் ஒரு பையன் மாத்திரம் என் வேண்டுகோளுக் கிசைந்து கிணற்றண்டை வந்து தண்ணீர்மொண்டு தந்தான். நான் தண்ணீர் குடித்துவிட்டுப் பள்ளிக்கூடத்திற்கு மீண்டுவிட்டேன்; மற்றப் பிள்ளைகள் எங்கே என்று உபாத்தியாயர் என்னைக் கேட்டபோது நான் உள்ளதைச் சொல்லிவிட்டேன்; உடனே அவர் ஒரு சிறுவனை அனுப்பி எல்லாரையும் கூப்பிடுவித்தார்; அவர்கள் வருவதற்கிடையில் உபாத்தியாயர் ஒரு பெரிய பிரம்பைக் கையிற்கொண்டவராய் மிக்க கோபத்தோடு நின்றார்; பிள்ளைகள் வந்தவுடனே அவர் அவர்களை நிரையாக நிற்கச் செய்து "உண்மையைச் சொல்லிவிடுங்கள்; இவ்வளவு நேரமும் எங்கு நின்று வருகிறீர்கள்" என்று கேட்க, பிள்ளைகள் ஒரு பதிலுஞ் சொல்லாமல் நிற்க, அவர்களுள் ஒருவன் மிக்க மரியாதையோடு சில இலந்தைப் பழங்களை மடியிலிருந்து எடுத்து உபாத்தியாயருக்கு வியத்துடன் நீட்டினான்; "உது என்னடா" என்று உபாத்தியாயர் கேட்க, இலந்தைப்பழம் உங்களுக்கென்று கொண்டுவந்தேன் என்று பயபக்தியாக மறுமொழி சொல்ல அவர் கோபம் நீங்கி இவனுடைய செயலைப் பார்த்துச் சிரித்தார் ஆனால் பிள்ளைகளுட் சிலர் அன்று தொடக்கம் என்மீது வெறுப்புடையவர்களாயிருந்தார்கள்.

*           *           *

பின்னேரத்தில் எங்கள் வகுப்பைப் படிப்பித்தற்கு ஒரு தமிழ்ப் பண்டிதர் வருவதுண்டு; தமிழ் படித்தற்கான நேரத்தையும் தமிழ்ப்பண்டிதரின் வரவையும் எங்கள் வகுப்புப் பிள்ளைகள் மிக ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்; தமிழ்ப்பாஷை தாய்மொழியல்லவா; அதனாற்றான் இவர்கள் அதனைப் பிரியத்தோடு படிக்க விரும்பி எதிர்பார்க்கின்றார்கள்போலும் என்று நான் என் மனசில் விளங்கியிருந்தேன்; ஆனால் நான் எண்ணியிருந்தது தவறென்பதைப் பின்னர்த்தானறிந்தேன்; தமிழ்ப் படித்தற்கான நேரம் வர மணியடிக்கப்பட்டவுடன் தமிழ் உபாத்தியாயர் ஆங்கு வரலாயினர்; நாங்கள் எல்லாரும் உடனே எழுந்து நிற்க அவர் "sit down" "இருங்கள்" என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் உடனே சொல்ல நாங்கள் இருந்தோம். "இன்றைக்கு என்ன பாடம்" என்று எங்களைக் கேட்க பஞ்சதந்திரம் என்று பிள்ளைகள் பதில் சொல்ல, "சரி ஒவ்வொருவராய் வாசியுங்கள்" என்று சொல்லிவிட்டுப் பண்டிதர் ஏதோ ஒரு பெரிய புத்தகத்தைத் தாம் பார்த்தபடியே யிருந்தார்; பிள்ளைகள் எவராயினும் எழுந்துநின்று வாசிக்கவில்லையென்பதை 15 நிமிஷஞ் சென்று கண்ட பண்டிதர் "அடா, ஏன் வாசிக்காமல் இருக்கிறீர்கள்" என்றதும், "புத்தகமில்லை" என்றார்கள். புத்தகமில்லாதவர்கள் எல்லாரும் எழுந்து நில்லுங்கள் என்று அவர் சொல்ல எனனைத் தவிர மற்றையெல்லாரும் எழுந்து நின்றார்கள்; இவர்களுட் சிலர் அங்குள்ள பஞ்சதந்திரப் புத்தகங்களைக் கொண்டு வந்தவர்களிடமிருந்து வாங்கி ஒளித்துவிட்டார்கள். பண்டிதர் புத்தகங் கொண்டுவாராததற்கு நியாயங் கேட்க, சிலர் மறந்துபோனதாகவும், சிலர் இன்னும் வாங்கவில்லையெனவும், சிலர் புத்தகத்தைக் கொண்டுவந்தவிடத்தில் யாரோ திருடிவிட்டார்களென்றும், சிலர் வீட்டில் குழந்தை எடுத்துக் கிழித்துவிட்டதென்றும், சிலர் புத்தககடைகளில் இப்புத்தகம் விலைக்கில்லையென்றும், சிலர் இன்றைக்கு இலக்கணமென்று நினைத்துப் பஞ்சதந்திரத்தை எடுத்து வரவில்லையென்றும், சிலர் புத்தகம் வாங்கக் காசு கொண்டுவந்திருப்பதாகவும் சொன்னார்கள். ஒரு பையன்மாத்திரம் தான் ஆங்கிலத்திற் பஞ்சதந்திரம் வைத்திருப்பதாகச் சொன்னான். இப்படி இவர்களெல்லாரையும் விசாரணைசெய்து முடிவதற்கிடையில் தமிழ் படித்தற்கான நேரமுங் கழிந்துவிட, மணியடிக்க, பண்டிதர் அந்த வகுப்பைவிட்டுப் போய் விட்டார். (வரும்)

## குமரேச சதகம். ௬௭.

நாமழியினுந் தங்குணமழியாதவை.

தங்கமா னதுதழலி னின்றுருகி மறுகி
    தன்னொளி மழுங்கி டாது [லுக்
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்க்
    தன்மணங் குன்றி டாது [தாலுமே
பொங்குமிகு சங்குசெக் தழலில்வெந் தா
    பொலிவெண்மை குறைவுறா து [லுமே
போதவே காய்ந்துநன் பால்குறுகி னு
    பொருந்துசுவை போய்வி டாது [லும்
துங்கமணி சாணையிற் றேய்ந்துவிட் டா
    தலங்குகுண மொழியாது பின் [லுக்
ஞெங்கமதரு பெரியோர் மடிந்தாலு
    நாயநிறை தவறுகு மோ [மவர்களது
மங்களகல் யாணிகுற மங்கைசுர குஞ்சரி
    மருவுதிண் புயவாச னே [வய
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனிடு
    மலைமேவு குமரேச னே,

இ-ள்: தங்கம் நெருப்பில் இடப்பட்டு நன்கு உருகினாலும் எவ்வகை வடிவாக்கப் பட்டாலும் அதனுடைய ஒளி கெடமாட்டாது, சந்தனக் கட்டை மெல்லியதாய்த் தேய்ந்து போனாலும் தன்னுடைய வாசம் குறையமாட்டாது; அழகியசங்கானது செவ்விய நெருப்பிலே வெந்தாலும், பொலிவாகிய வெண்ணிறம் குறையாது; நன்கு காய்ந்த பால்வற்றினாலும் அதன் சுவை குறையாது; உயர்ச்சியுள்ள ரத்தினம் சாணையில் தேய்க்கப்படினும் அதன் ஒளி குறையாது; பழையவர்களாகிய பெரியோர்கள் மாண்டாலும் அவர்களுடைய மேலான ஒழுக்கத்தாலாகிய புகழ் மாய்வதில்லை; மங்களமான குறப்பெண்ணாகிய வள்ளிநாயகி தெய்வநாயகி என்னுந் தேவிமாரைத்திருமணஞ் செய்தருளிய திருமார்பையுடையவரே; மயிலேறிவிளையாடு குகனேபுல் வயல்நீடு மலைமேவுகுமரேசனே; எ-று.

"சுடினுஞ்செம்பொன் தன்னொளிகெடாது"
"அரைக்கினுஞ் சந்தனம் தனமணமறாது"
"சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" "அட்டாலும்பால் சுவையிற் குன்றாது" எனப் பிறர் கூறியவற்றையும் நோக்குக.

## காலநிலை.

மழைக்கோலங் காணப்படுகின்றது; தென்மராட்சிப் பகுதியிற் சிற்சில இடங்களில் மழை பெய்ததாக அறிகிறேம். குளிரோடு கூடிய கடுங்காற்று வீசுகின்றது ஊரிற் பலவகையான நோய்கள் பரவியுள்ளன.

## இந்துக்கல்லூரிப்
## பழைய மாணவர்களின் பரிசுகள்.

தக்கிக்கத்தோர்ப் பகுதியிற் பரிசோதனைக்காரர்களாய்ப் பிரிற்றப்பட்டுவரும் ஸ்ரீ பெ. சின்னத்தம்பி யென்பவரும், ஸ்ரீ M. நல்லதம்பி என்பவரும் கொழும்புமாநகர் அரசினர் கைத்தொழிற்கலாசாலையில் (Govt. Technical Schools) கௌரவ சேர் பொன்னம்பலம் இராமநாதனவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் சென்ற வெள்ளிக்கிழமை சாயந்தரம் நடந்த பரிசளிப்புக்கூட்டத்திற் சிறந்த பரிசுகளை மின்சாரசம்பந்தமான பாடங்களிற் பெற்றனர். பரிசுகள் ஸ்ரீ F. E. கேனர்ட் (Kenard) என்பவரால் அளிக்கப்பட்டன.

## பெண்டாட்டியை வெட்டினான்.

சென்ற செவ்வாய்க்கிழமைகாலை ஆனைக்கோட்டையில் வசிக்கும் சாகன் சின்னத்தம்பி என்னுமொருவன், தன் பெண்டாட்டியின வயிற்றைக் கத்தியாற் கிழித்து மோசமான காயப்படுத்திவிட்டுத் தானே தன் வயிற்றிலும் மோசமான காயமுண்டாகக் கிழித்துக்கொண்டான்; புருஷன் மனைவி இருவரும் அபாயமான நிலையில் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையிற் கிடக்கின்றனராம். சின்னத்தம்பியென்பவன் இவளைக் கல்யாணஞ் செய்து இருவருஷமிருக்குமென்றும் பல மாசங்களாக இருவரும் மனஸ்தாபப்பட்டுப் பிரிந்திருந்தார்களென்றும் இற்றைக்கு 10 நாட்களின்முன் சின்னத்தம்பி தன் மனைவியோடு சந்தோஷமாயிருந்தானென்றும் இவளைத் தன் வீட்டிற்குவரும்படி புருஷன் கேட்க, தனக்குப்புதிதாய் வீடுகட்டித்தந்தாலல்லாமல் வரமாட்டேனென்று மனைவி மறுக்க, சின்னத்தம்பி ஆத்திரங்கொண்டு இச்செயலைச்செய்தானென்றுஞ் சொல்லப்படுகின்றது குறித்த சின்னத்தம்பி யென்பவன் வைத்தியசாலையில் இன்றுகாலை இறந்துபோயினன் என அறியலானோம்.

## வீண் வதந்திகள்.

சிலநாட்களாக இந்த யாழ்ப்பாணத்திற்பலவகையான வீண்வதந்திகள் பிறக்கின்றன; சென்றவாரம் வெளிவந்த இப்பத்திரிகைப் பிரசுரத்தில் சங்கானையிலுள்ள ஒரு குழந்தையைத் தெருவாற்சென்ற ஒருமோட்டர்ரதம் கெரித்துவிட்டதென்றும், கெரியுண்ட குழந்தையை யேற்றி ரதச்சாரதி வைத்தியசாலைக்குக் கொண்டு போகும்மார்க்கத்தில் அது மோசம்போய்விடச் சாரதி பிரேதமாகக் குழந்தையைத் திருப்பிப் பெற்றோரிடத்திற்குக் கொண்டுவர, தகப்பனார் ஆத்திரங்கொண்டு சாரதியைப் புடைக்கச் சாரதி உயிர் துறந்தானென்றும் வெளியிட்டிருந்த புதினம் நிரவிசாரித்தவிடத்திற் சுத்த அபத்தமென அறியலானோம்; இப்படியான ஒரு புதினம் வதந்தியாகப் பிறந்திருக்குஞ் சமயத்தில், இங்குள்ள இன்னொரு பத்திரிகை இதனை வெளியிட்டமையினுற்றான் நாமும் மெய்யெனநம்பி வெளியிடலானோம்; இப்பத்திரிகைகளைப் பின்பற்றி இங்கு வெளியாகும் வேறு சில பத்திரிகைகளும் இப்பொய்ப் புதினத்தை வெளியிடலாயின. இயன்றவரையில் தக்க ஆதாரத்துடன் எப்புதினங்களையும் வெளியிடவும் யாம் இதில் மோசம்போனது மனவருத்தத்திற்கிடமாகும் அபிமானிகள் பொறுப்பாராக. நிற்க, இப்பொழுது இதேபிரகாரமான இன்னொரு பொய் வதந்தி பரவுகின்றது. அஃதென்னவெனின் தென்மராட்சியிலுள்ள ஒரு விதானையாரைக்கொலை செய்து அவருடைய தலையை பணியகாரனுடைய வீட்டுப்படலையிற் கொண்டுபோய் யாரோ கட்டிவிட்டார்களென்பதாம். இப்படிப்பட்ட பொய்வதந்திகள் வட்டுக்கோட்டைப்பயங்கரகொலை நடந்தபின்னரே பரவலாயின; இவற்றைப் பரப்பி ஊரவர்களைத் திகிலுறச் செய்பவர்யாரென்பதை நமது பொலிசர் ஆராய்ந்து பிடித்து இவர்களைத் தக்க தண்டனைக்குட் படுத்துதல் தக்கதாகும்.

## ஒழுங்கை ஊரவர்கட்கோ புகையிரதப் பகுதிக்கோ.

கொடிகாமப் புகையிரதஸ்தான உத்தியோகத்தர் மேற்படி ஸ்தானத்திற்கு அணித்தாக இரு ஒழுங்கைகள் உண்டென்றும் அவைகள் மூலமாகச் சனங்கள் போக்குவரவு செய்தல் புகையிரதப்பகுதிக்குவசதியீனமாக விடுகின்றதென்றும் கொழும்பிலுள்ள புகையிரதப்பகுதித்தலைமை உத்தியோகத்தருக்கு முறையிட்டார். தலைமை உத்தியோகத்தர் ஒழுங்கைகளை மறித்து அடைத்துவிடும்படி கட்டளை செய்ய அப்படியே அந்த இரு ஒழுங்கைகளும் மறித்து அடைக்கப்பட்டன, இதனுல் வசதியீனமடைந்த ஊரவர்கள் வடமாகாணத்தலைவருக்குப் புகையிரதப்பகுதியாரின் செயலை முறையிட்டனர்; வடமாகாணத்தலைவர் புகையிரதப்பகுதித் தலைமை உத்தியோகத்தருடன் குறித்த ஸ்தானத்தையடைந்து நேரில் விசாரணை செய்தபோது, ஒழுங்கைகள் மிகப்புராதனமானவையென்றும் புகையிரதப்பகுதியார் மேற்படி பாதைக்காக நிலம்வாங்கியபோது இந்த ஒழுங்கைகளை வாங்கவில்லையென்றும் ஆனமையினால் அவற்றைமறித்தடைத்தல் முறையல்லவென்றும் நிச்சயித்தனர் மேற்படி ஒழுங்கைகள் வாயிலாகச் சனங்கள் முன்போற் போக்குவரவுசெய்கின்றனர்.

## வித்தியா தருமம்.

திருக்கோணமலை ஸ்ரீ சண்முக முதலியாரின மனைவியாராகிய ஸ்ரீமதி தங்கம்மா என்னும் மூதாட்டி ஸ்ரீ சண்முக வித்தியாலயம் என்னும் பெயருடன் சைவச் சிறுமியர்கட்கான ஒரு ஆங்கில வித்தியாசாலையைக் கட்டுவித்து நடத்திவரலாயினர். வித்தியாசாலைக் கட்டடம் மிகவும்பெரிதும் அழகுவாய்ந்ததுமாகும். இவ்வித்தியாசாலை சென்றவருடம் அரசினர் நன்கொடைப்பணம் பெறும் வித்தியாசாலையாகப் பதிவுசெய்யப்பட்டது. அரசினர் இவ்வித்தியாசாலைக்குக் கட்டட நிதியாக 5050ரூபா உதவியுள்ளனர். ஸ்ரீமதி தங்கம்மாவால் நடாத்தப்படும் சைவச்சிறுமியர் தமிழ் வித்தியாசாலையுமொன்றிருக்கின்றது. 9000 ரூபா வரையிற் செலவிட்டு இவ்வித்தியாசாலைக் கட்டடமும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இதுவரையில் இவ்வுத்தமி வித்தியாதானமாகச் செலவிட்ட பணம் அரை லக்ஷத்திற்கு மேற்பட்டதென அறிந்தோர் சொல்லுகின்றனர்.

## சாராயத்தவறணைகள் தவிர்க்கப்பட்டன.

மன்னார்ப்பகுதியிலும் வவுனியாப்பகுதியிலுமுள்ள சாராயத்தவறணைகள் எல்லாம் அரசினர் விருப்பத்தின்படி இந்த அக்டோபர்மீ 1உ தொடக்கமாக ஒழிக்கப்பட்டனவென அறிந்து மகிழ்ச்சியுறலானோம்.

## 200000 சீனர் கொல்லப்பட்டனர்.

சீனதேசத்தைச் சேர்ந்த கான்சு மாகாணத்திலே மார்க்கவெறி கொண்ட இஸ்லாமானவர் இரண்டு லட்சம் சீனரைப் படுகொலை செய்துவிட்டனரெனச் சமாசாரம் எட்டியிருக்கின்றது.

## தேகவியோகம்.

அளவெட்டியிலுள்ள பிரபல வைத்தியர் ஸ்ரீ நா. தம்பாவர்களின் மனைவியும் வைத்தியர் ஸ்ரீ கனகசபாபதிப்பிள்ளையின் தாயாருமாகிய ஸ்ரீமதி பொன்னுப்பிள்ளை சென்ற ஆவணிமீ 18உ தேகவியோகமாயினர்; ஈமக்கிரியைகள் சிறப்பாக நடைபெற்றன. அந்தியேஷ்டி புண்ணிய தீர்த்தக்கரையிற் செய்யப்பட்டது. —கடிதம்.

## இந்துசாதன ஆலயப் புதுக்கட்டடப் பிரவேசம்

தல யாத்திரைக்காக சில நாட்களின்முன் இங்குவந்த யான், இன்று எனக்குக் கிடைத்த இந்துசாதனப் பத்திரிகையில் அதன் ஆலயப் புதுக்கட்டடப் பிரவேச விஷயமாக வரையப்பெற்றிருந்தவைகளைப் பார்த்து மகிழ்ந்தேன். முன்பின் 28 வருஷகாலமாக இந்து சாதனப் பத்திரிகைகளைத் தப்பாது படித்து வந்தமையால் யான் அடைந்த நன்மைகள் பல; அவற்றையெல்லாம் இங்கே விபரித்தல் முடியா. எனக்கிவ்வாறனல் நாற்பது வருஷகாலமாக இப்பத்திரிகைகளைப் படித்து எத்தனைபேர் நன்னிலைக்கு வந்தார்களென்பது சொல்லவும் வேண்டுமோ? இப்படியெல்லாம் எங்களுக்கு நல்வழிகாட்டியாயிருக்கும் எங்கள் சாதனத்துக்கு நாம் செய்யும் கைமாறும் உண்டோ! நிற்க.

இவ்வூரிலே யாழ்ப்பாணத்தவர் சிலர் இருக்கின்றார்கள் அவர்களில் மூன்று பெயரையாவது பத்திராபிமானிகளாக்கி அவர்களிடம் ஒருவருஷப் பத்திரிகாசந்தாவை முற்பணமாய் அனுப்பச் செய்கிறேன். இது அன்றி யாழ்ப்பாணத்திலிருக்கும் எனது சிரேஷ்ட புத்திரனுக்கு இந்துசாதன ஆலயக் கட்டடத்திலிடும் ஒரு திராந்தியின் கிரயமாக 30 ரூபா கொடுக்கும்படியும், பிரவேச தினமாகிய 23-11-28 அன்று மஞ்சள், சந்தனம்; புஷ்பம், கற்கண்டு, தேங்காய், பழம், தாம்பூலம் ஆதியனவுடன் இந்துசாதன ஆலயம் சென்று அன்றும் அடுத்த மூன்றுநாட்களிலும் தேகத்தாலான கைங்கரியங்கள் செய்யும்படியும் இன்றே கடிதம் எழுதியுள்ளேன்; அத்தினத்தில் யாரும் இந்துசாதனம் என்றும் தழைத்தோங்கும்பொருட்டு இங்கே எழுந்தருளியிருக்கும் சித்திரசபாநடேசருக்கு விசேஷ ஆராதனை செய்வித்து மகாதைஸ்வரிய மஹா பிரசாதம் அனுப்பிவைப்பதோடு பிரவேச தினத்தன்று பகல் ஒரு மணியளவில் கிடைக்கத் தக்கதாக என் மனப்பூர்வ ஆசீர்வாத தந்தியும் சொல்லுவேன்.

அம்பாசமுத்திரம்,
2-10-28

இங்ஙனம்,
G. வேங்கடபதி.

## புரட்டாதிச் சனியும் ஆலமிலையிற் போசனமும்.

"வாழையிலை புன்னை புரசுடன் கொக்குருக்கத்தி
மாப்பலாத்தெங்குபன்னீர்
மாவிலமுதன் மைமா டெருமாமேயாரு சுகந்தெழும்பாடலம்
தாழையிலைஅத்தி ஆவேரண்டபத்திரஞ்
சகதேவமுள்முருக்குச்
சாருமிவையன் றியெண்பாலெருக்கிச்சிவிலை
தனிலுமுண்டிடவொணுதால்"

என்னும் பிரமாணப்படி வாழையிலை, புன்னையிலை, பலாசயிலை, குருக்கத்தியிலை, மாவிலை, பலவிலை, தெங்கிலை, பன்னீர்ப்பத்திரம், இவைகளில் போசனஞ் செய்யலாம். அரசிலை, தாமரையிலை, பாதிரியிலை, தாழையிலை, அத்தியிலை, ஆமணக்கிலை, முள்முருக்கயிலை, எருக்கலயிலை, இத்தியிலை, இந்த இலைகளில் போசனஞ் செய்யக்கூடாது. இவற்றையறியாது புரட்டாசிச் சனிக்கிழமை விரதமிருப்பவர்கள் ஆலயிலையிற் காகத்திற்குச் சோறுவைத்துத் தாங்களும் ஆலமிலையிற் சாப்பிடவேண்டுமோம்; இது இப்படி ஆனால் ஞாயிற்றுக்கிழமைவிரதமிருப்பவர்கள் எருக்கலமிலையிலும் வெள்ளிக்கிழமை விரதமிருப்பவர்கள் அரசமிலையிலுஞ் சாப்பிடவேண்டுமே, இன்ன இன்ன விரதமிருப்பவர்கள் இன்ன இன்ன இலையிற்றான் போசனஞ் செய்யவேண்டுமென்று ஒரு விதியுமில்லையே. புரட்டாதியில் வருஞ் சனிக்கிழமை மாத்திரம் காகத்திற்குச் சோறுவைத்துப் பின் சாப்பிடவேண்டுமாம். எவர்களாயிருந்தாலும் போசனஞ் செய்யும் எப்பொழுதாவது காகத்திற்கு முன் உண்ணும்படி செய்து பின் உண்ணவேண்டும். இதுபற்றியன்றோ "போசனகாலே காகபலிஞ்சயனே அஸ்ததாடனம்" என்பது போசனத்திற்குமுன் காகத்திற்கு வைத்தும் படுக்கப் புகும்போது பாய், தலையணை முதலியவற்றை நன்றாய்க் கையினுற்றட்டி விரித்துப் பின் படுக்க வேண்டியதுமாம்.

காக்கை யென்னும் பட்சிகளுள் சில தேக முழுவதும் கருநிறமுடையதும் சில கழுத்தில் மாத்திரம் சாம்பர் நிறமும் மற்றைய தேகமுழுவதும் கருமைநிறமுடையதாகவுமிருக்கின்றன. இவை ஐந்திரம், வாருணம், வாயவ்யம், யாம்யம் என நான் தலைகைப்படும். இவைகட்குப் பலியிடுவோர் யமதண்டனையினின்றும் விடுபடுவார்கள் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள், அறியப்படாத பிதிர்தேவதைகள் வாயசருபமடைந்து இல்லறத்தாரை வாயச [காக] பலி இடவேண்டுமென்பார்கள்.

காகமானது விஷஞ்சேர்ந்த உணவுகளை உண்ணமாட்டாது. இதனுற்றான் உணவில் விஷங்கலப்புண்டோ? இல்லையோ? என்னும் சந்தேகம் நீங்கும்பொருட்டே நாங்கள் போசனஞ் செய்யுமுன் ஒருகவளஞ் சோற்றைக் காகத்திற்கு வைத்து அது உண்டபின்பு உண்ணுகிறோம். இன்னுஞ்சிலநுட்பங்களுண்டு; சமயம்வாய்த்துழிக்காட்டுதும். நிற்க.

இதனைக் கண்ணுறும் பெரியோர்களே! எவர்களாயிருந்தாலும் சனிக்கிழமை விரதம் அனுஷ்டிக்குங் காலத்திலே கார்த்திகைவிரதம் பிரதோஷவிரதம் ஏகாதசிவிரதம் முதலிய சில விரதங்களையும் அனுஷ்டிக்கவேண்டி வந்தால் எவ்விதமாகச் செய்யவேண்டுமென்பதை இப்பத்திரிகைவாயிலாகத் தெரிவித்தால் எல்லவர்க்கும் உபயோகமாக இருக்குமென்பது நம்முட்கிடை.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோயில், சதுமலை.

## பொதுவான சமூக சுகாதாரம்.

"ஜீவனமல்ல, ஜீவிக்கும் முறையே முக்கியமானது" ஜீவனின் முக்கியமான காரிய மூலம் எதுவென்றால் ஜீவிப்பதுதான். எங்கள் குழந்தைகள் தங்கள் தொட்டில்களிலும் பள்ளிக்கூடப் பிள்ளைகள் தங்கள் வித்தியாசாலைகளிலும், வேலையாட்கள் தங்கள் தொழிற்சாலைகளிலும் வசிக்கிறார்கள் என்பதை நாம் நினைத்துக் கொள்ளவேண்டும். தொட்டிலிலே, வித்தியசாலையிலோ, அல்லது தொழிற்சாலையிலோ சரியான முறைகளை அனுசரித்து வசிக்கும் பொருட்டாக செலவழித்த பணமே ஒரு சாதியாரால் ஏற்ற பிரகாரம் செலவழிக்கப் பட்ட பணமாகும்.

இவ்வித நோக்கத்தை யடையும் வழி:—

(1) ஒரு சாதியாரின் எத்தனங்கள் மூலமாகவும் (சன சமூக சுகாதாரம்)

(2) ஒவ்வொருவரும் தனித்தனியே செய்யும் எத்தனங்களாலும் (தன் சுகாதாரம்)

ஒரு சாதியாரினுடைய எத்தனங்கள் பின்வரும் சொல்லப்படும் விதமாக இருக்கவேண்டும்.

1 வாசஞ் செய்யுமிடம். வாசஞ் செய்வதற்குப் போதியளவு விசாலமான இடம் மிகவும் முக்கியமாய்த் தேவை, சன நெருக்கம் ஒருவனுக்கு அத்தியாவசியமாய்த் தேவையுள்ள சுத்தமான காற்றை இல்லாமற் பண்ணுகிறது. தண்ணீர், மலசலம்கழித்தல், குப்பைகஞ்சல் அகற்றல் முதலிய இக்கருமங்களுக்குத் தகுந்த ஏற்பாடு செய்தலும் மிகவும் முக்கியமான காரியம்.

2. வேலை செய்யுமிடங்களின் ஒழுங்குகள். சுகாதாரமற்ற இடங்களில் நோய்கள் உண்டுபடும். வேலைஸ்தலமும் தொழிற்சாலையும் சுகாதாரமுள்ள நிலைமையிலிருக்கக்கூடிய விதமாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அளவு கடந்த வேலையும் மிதமிஞ்சிய ஆயாசமும் அதிப்பிரயாசையும் ஒருவனுடைய இயற்கைப் பலத்தைக் குறைவுபடப்பண்ணி அவனுக்கு நோய்களை உண்டுபடுத்தி விடுகின்றது. அதி, அளவுக்கு மிஞ்சிய குடி சாம் முதலிய இவைகளும் ஒருவனுக்கு நோயை உண்டு பண்ணும் உதவிக்கருவிகளாகும்.

3. சுடுபாடுள்ள நீவியம் தரித்திரமும் மிடிமையும் சயரோக வியாதியின் தோழர்கள். தரித்திரத்தை நீக்காமல் சயரோகவியாதியை விலக்க எத்தனிப்பது வீண்பிரயாசமான நியமம். இதனுல் தகுந்த சம்பளமும் அச்சம்பளத்தைக் கட்டுப்பாடாய்ச் செலவழித்துச் சீவியத்தை நடத்தக்கூடிய கெட்டித்தனமுமிருந்தால் சயரோகவியாதி அணுகவிடாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

4. பள்ளிக்கூட ஒழுங்குகள். சுகாதார ஒழுங்குகளைக் கவனித்துப் பள்ளிக்கூடங்கள் கட்டப்படவேண்டும் ஒழுங்காக டாக்குத்தர் போய்ப் பிள்ளைகளைப் பரிசோதனை செய்தலும் செவிலித்தாய் அவர்களைப் பராமரித்தலும் வெளியான இடங்களில் பிள்ளைகள் விளையாடுவதற்குத் தகுந்த ஒழுங்குகள் செய்தலும் உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு உணவுப் பொருட்களைப்பற்றியும், வெளியில் உலாவுவதனால் வரும் நன்மைகளைப்பற்றியும், ஜன்னல்களைத் திறந்து அறைக்குள் புதிய காற்றும், சூரிய வெளிச்சமும் பரவச்செய்வதினால் உண்டாகும் நன்மைகளைப்பற்றியும் புத்திமதிகள் கற்பித்தலும் மிகவும் முக்கியமானகாரியங்கள். இவ்விதம் செய்வதால் பிள்ளைகளின் பிற்கால ஒழுங்கான சீவியத்திற்கு இவைகள் அதிபாரமாகின்றன

5. ஒழுங்கான வைத்திய பரிசோதனை. சிறுபிள்ளைகளுக்கு வைத்தியம் செய்விப்பதற்கு ஒரு வைத்தியசாலை ஸ்தாபித்தலும், பள்ளிக்கூடங்களும் தொழிற்சாலைகளும் டாக்குத்தராலே ஒழுங்காகச் சோதிக்கப்படுதலும் மிகவும் அவசியம். பிள்ளைகள் இலேசாகச் சுவாசஞ் செய்ய விடாமல் தடைபண்ணும் வியாதிகளாகிய உண்ணாக்கு, அடெனோயிட்ச (Adenoid) என்னும் இந்நோய்களைச் சுறுக்கில் மாற்றிவிடவேண்டும். சயரோகவியாதி ஆரம்பமாகும் காலங்களிலே கண்டுபிடிக்காவிட்டால் மிகவும் இலேசாகமாற்றிப்போடலாம். மேலே சொல்லப்பட்ட நோயின் மூலாதாரங்களை மாற்றக்கூடியவும் தடுக்கக்கூடியவும் வழிவகைகளால் அகற்றிப்போடலாம்.

இக்காரியங்கள் ஓர் சனசமூகத்தார் ஒருமித்துச் செய்யும் எத்தனங்களினுல்தான் செய்து முடிக்கக்கூடியன. எப்படியும் நீ அச்சனசமூகத்திற்குச் சேர்ந்தவர்களில் ஒருவன். ஆனபடியால் உன்னுலியன்றதைச் செய்தலவசியம், அது உன்னால் கூடும்.

## கண்ணப்பர் அன்பு.

"கண்ணப்பநாயனுரைப்புலால்உண்டு, புலாலை இறைவனுக்குக் கொடுத்ததால் அசைவராகார் என்று வாய்கூசாது உரைக்கின்றனர். கண்ணப்பநாயனுர் சைவரல்ல வெனில் வேறுயார்தான் சைவர்கள்? இவரை அசைவரென்று கூறும் பெரியோர்கள் சைவர்களா? என் சிற்றறிவுக்கெட்டவில்லை அன்பர்கள் அதனை விளக்குவார்களாக? ஒரு காரியத்தைச் செய்யுங்கால் இன்னது செய்தால் நன்மையானது, இன்னது செய்தால் தீமையானது என விதிவிலக்கு உணர்ந்து இருந்தும் நன்மையை விடுத்துத் தீமை செய்தால் அக்காரியத்தைச் செய்தவனுக்குப் பழியும் பாவமும் மிகுதிப்படுதல் ஒருதலை. இவ்விதம் விதிவிலக்கு உணராது தான் செய்வனவெல்லாம் நன்மையாமென உட்கொண்டு செய்தால் அதனுல் பாவம் மிகுதிப்படுவதில்லை. அதுபோல "கொல்லாமை மறியாமை குணமாகக் கொண்டொழுகும்" வேடுவக் குலத்திலுதித்த கண்ணப்பர் கானில் வாழ் விலங்குகளைக் கொன்று தின்றது அதிகத்தீமையாவாது. அன்புருவாய கண்ணப்பர் இறைவனுக்குப் புலாலை யூட்டி மகிழ்ந்தது அன்பின் செலேயாகும். சிவகோசரியாருக்குங் கடவுள் உணர்த்தியதனுல் கண்ணப்பர் செயல் கருணையற்றதும், சைவத்திற்குப் புறம்பானது மெனவுரைத்தல் பொருந்தாததாகும் என அறியலாம். இக்காலத்து பார்ப்பனர் ஆரியரா? என்று ஒரு வினு எழுந்திருக்கிறது. இவ்வேறு பாட்டினை என் ஆசிரியர் இயற்றியுள்ள 'தமிழரும், ஆரியரும்,' 'வேளாளர் யாவர்,' 'சாதிவேற்றுமையும் போலிச் சைவரும்' என்னும் நூல்களில் கண்டு தெளிவாராக. சங்க நூல்களில் பார்ப்பனரைப் புகழ்ந்திருக்கவில்லை என்று இப்போறிஞர்கள் முடிவு கட்டுகிறார்கள் "புறநானூற்றிலும்," "அகநானூற்றிலும்" "கலித்தொகை" முதலிய நூல்களிலும் அந்தணர் கோமானுகிய கபிலர் முதலியோரைப் புகழ்ந்து பாடியிருத்தலை இப்பெரியார்கள் பார்க்கவில்லைப் போலும். அந்தணத் தன்மையடைந்த எப் பகுப்பினரும் அந்தணரேயாவர். அதனை இடுகுறியாகக் கொண்ட ஒரு வகுப்பினருக்கே அப்பெயர் உரியதல்லவெனவறிக. இதனையுணர்த்தற்கன்றே.

"அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ், செந்தண்மை பூண்டொழுகலான்".

என்னும் அமுதவாக்கும் எழுந்தது என்க. இனியாகிலும் இச் சீர்திருத்தக்காரர்கள் செல்வனம் நடந்து கொள்வார்களாக.

## இலக்கம் 14.

### அரசாங்கவைத்திய சுகாதாரப்பகுதி வெளியீடு.

### சனசமூகசுகாதார அபிவிருத்திச்சங்கங்கள்.

### இலங்கையில் இன்னும் 63 ஆரோக்கிய அபிவிருத்திக் கழகங்கள் தேவை.

தடுக்கக்கூடிய நோய்களை வராமற்தடுத்து அதனால் உலகத்தில் நோயைக் குறைத்துச் சனங்களின் ஆயுட்காலத்தை நீடிக்கச்செய்வதற்காகவே சனசமூக சுகாதார முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இலங்கையில் தடுக்கக்கூடிய நோய்களால் பெருந்தொகையானோர் பிடிக்கப்படுகிறார்களென்றும் அக்காரணம் கொண்டு அநேகர் இறந்துபோக நேரிடுகிறதென்றும் பொதுவாய் ஒத்துக்கொள்ளத்தக்கதாயிருக்கிறது. நகரங்களிற்தான் மிகவும் விருத்தியடைந்த சுகாதார அபிவிருத்திச் சங்கங்களிருக்கிறதென்பதும், தற்காலத்துக்குத்தக்கபடி அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சுகாதாரத்துறை முயற்சியுள்ள ஒவ்வொரு நகரியிலும் அவர்கள் பொதுசன சமூக சுகாதாரங்களைக் கவனித்துக்கொள்ள ஒருபகுதியாரை அமைத்து அவைகளின் செலவுக்கென்று அரசிறைக் கணக்கில்வருவதாகும் ஒருதொகைப்பணத்தை ஏற்படுத்துவதும் யாவரும் நன்கறிந்த விஷயம். நகரவாசிகளைப்போல் கிராமவாசிகளுக்கும் சுகாதாரபாலனம் வேண்டியதில்லையாவென்று ஒருவர் கேட்கலாம். அக்கேள்விக்கு ஆம் கட்டாயமாய் வேண்டியதென்பதே விடை. பெரும் பட்டணங்களிலும் நகரிகளிலுமுள்ள சுகாதாரத்துறை முயற்சிகளைப்போல் சின்னப் பட்டணங்களிலும் கிராமங்களிலும் நாடுகளிலும் சுகாதாரத்துறை முயற்சிகளை ஸ்தாபிக்கும் நோக்கமாகவும், தற்காலம் மிகவும் விருத்தியடைந்து கொண்டுவரும் ஆரோக்கிய அபிவிருத்திக் கழகங்கள் (Health Units) மூலமாய் அதிஷ்டவசமாய் நாட்டுச்சனங்களுக்கும் சுகாதாரபாலனம் கிடைக்கப்படுகின்றது. நகரசுகாதார டிப்பாட்மெந்துகளைப்போல் இந்த ஆரோக்கிய அபிவிருத்திக்கழகங்கள் எங்கெங்குஸ்தாபிக்கப்படுகிறதோ அங்கங்கு அவைகள் நிலைபெறும் விடும்.

புதினப் பத்திரிகைகள் வாசிப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்த ஆரோக்கிய அபிவிருத்திக் கழகங்களைப்பற்றி நல்லாய் அறிந்திருப்பார்களென்பதற்குக் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. இந்தக்கழகங்களினால் ஏற்படும் நன்மையையும் உதவியையும் பெற்றுக்கொள்ளும் சனங்கள் எவ்வளவு அதிட்டமுடையவர்களென்பதையும் நன்கு அறிவார்கள். இவைகளைப்பற்றி அதிகம் விரித்துரை கூறுவது எங்கள் உத்தேசமல்ல. தெளிவாய் விளங்கி அறிந்து கொள்ளப்போதியளவு விரிவாய்ப் பேசப்படாதவும் கூட்டங்களில் தர்க்கம் பண்ணப்பட்டவும் சிற்சிலவிஷயங்களைப் பற்றிமாத்திரம் இங்குகூறுவது நன்மையாயிருக்கும்.

#### இடம்.

இத்தீவில் ராஜாங்கசம்பந்தமாய்ப் பிரிக்கப்பட்ட ஒன்பது மாகாணங்களும் மிகவும் விசாலமுடையவைகளாயிருக்கிறபடியினால் ஆரோக்கிய அபிவிருத்திக் கழகங்கள் மூலமாய் சுகாதாரமுயற்சிகளைச் செவ்வையாய்ப் பார்த்துக்கொள்ளுகிறதற்கு இடம் தரமாட்டா. ஆனபடியால் இம்முயற்சிகளைச் செவ்வனே செய்யும் நோக்கமாக இத்தீவை 63 பிரிவுகளாகப்பிரித்துக்காட்டும் ஓர் படம் சித்தமாக்கப் பட்டிருக்கிறது. ஏதோகூடிய சீக்கிரத்தில் இப்படியாய்ப் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவிலும் ஆரோக்கிய அபிவிருத்திக் கழகங்களை ஸ்தாபித்து அவைகள் மூலமாய் இத்தீவின் எப்பாகத்திலுமிருக்கும் சனங்களுக்குச் சுகாதார சேவை செய்யப்படும்.

சனங்கள் ஆரோக்கிய அபிவிருத்திக் கழகங்களிற் பெரிதும் ஊக்கமெடுத்து ஒவ்வொரு வழியிலும் அவைகள் அநுகூலமடைந்து கொண்டுவருகிறதற்கு ஒத்துழைத்தாலன்றி இப்படியான கழகங்கள் அவர்களின் விருப்பமில்லாமல் ஸ்தாபிக்கப்படமாட்டா தென்பதை அறிந்துகொள்ளவேண்டியது. இதனால் ஓரிடத்தில் நாம் ஆரோக்கிய அபிவிருத்திக் கழகம் உண்டுபண்ண வேண்டுமாயிருந்தால் இதற்குத் தடையாய் இருக்கும் ஒருவரால் அல்லது வீண்சத்தம்போடும் ஓர் சிறிய வகுப்பைச் சேர்ந்தவர்களால் தடைபண்ணப் பட்டாலும் பொதுசன சமூகத்திற்கென்று செய்யப்படும் இம்முயற்சிகளைக் கைவிட்டு விடுவோமென்று கருதலாகாது. என்னெனில் இவ்விலங்கையில் சரி அல்லது உலகத்தின்வேறு எப்பாகத்திலும் சரி ஒரு விஷயத்தில் அது எவ்வளவு நன்மை பயக்கத்தக்கதாயிருந்தாலும் சரி ஒருமனப்பட்டு ஒத்துழைப்பது கூடாத காரியமாயிருக்கிறது. ஆனபடியினால் ஒருடத்திலிருக்கும் முக்கியமான மனிதர்கள் ஒரே மனதாய்த் தங்களுக்குச் சுகாதார அபிவிருத்திக்கழகம் தேவையென்றும் அதற்காகத் தங்களால் கூடியளவு உதவி புரிவோம் என்றும் செப்புவார்களாயிருந்தால் அவ்விடத்தில் கட்டாயம் ஓர் ஆரோக்கிய அபிவிருத்திக்கழகம் ஏற்படுத்தப்படும். எப்படி இருந்தபோதிலும் தொடக்கத்தில் இராசதானிகளில் அல்லது அவைகளுக்குச் சமீபத்திலிருக்கும் அதிகம் குடிசனம நெருங்கிய ஊர்களிற்தான் இந்தக்கழகங்களை ஸ்தாபித்தல் உத்தமம் என்று எண்ணப்படுகிறது. என்னெனில் அதனால் உண்டாகும் நன்மைகளை அங்கு குடியிருக்கும் பெருந்தொகையான சனங்களுக்குக் காட்டினாற்தான் குடிசனம் குறைவாய் இருக்கும் இடங்களில் இவ் நன்மைகள் பெரிதும் புலப்படும்.

#### செலவு கணக்கு.

உலகம் முழுவதிலும் பொதுசன சமூக சுகாதார முயற்சிகளுக்காகவேண்டிய செலவுகள் அரசாங்கத்தாராலேயே விடப்படுகின்றது. அதுபோல் இலங்கையிலும் ஆரோக்கிய அபிவிருத்திக் கழகங்களுக்கு வேண்டிய செலவுகள் அரசாங்கத்தாராலேயே விடப்படுகின்றது. ஆனால் இங்கு நன்கு வதப்பட்ட சனசமூகங்களும் இச்செலவுகளில் தாங்களும் பங்கு பொறுக்க முன்வந்திருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்கள் தங்களால் கூடியளவு உதவியைச் செய்வார்களென்பதற்குக் கொஞ்சமேனும் ஐயப்படத் தேவையில்லை. சுகாதார முயற்சிகளைச் செய்தற்கு போதுமான வேலையாட்களை வைத்திருக்கும் நகரபரிபாலன சங்கம் (Urban District council) லோக்கல் போட் (Local Board) சுகாதார அபிவிருத்திச் சங்கம் (Sanitary Board) ஆகிய இச்சங்கங்கள் ஒரு ஆரோக்கிய அபிவிருத்திக் கழகத்தை ஸ்தாபித்தற்கு வேண்டிய செலவிற்கு அதற்கென வேறு பணம் அமைத்து வைக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவ்வித சங்கங்களுக்கு ஓர் முழுநேரம் வேலை பார்க்கும் சுகாதார மெடிக்கல் ஆபீசரையும் (M O H) சுகாதாரம் பார்க்கும் செவிலித் தாய்மாரையும் (Public health Nurses) சிலபேரும் கொடுப்பதோடு அச்சங்கங்களில் கடமை பார்க்கும் சுகாதார இன்ஸ்பெக்டர் மார்களுக்கும் (Sanitary Inspectors) வேண்டிய பயிற்சிகளையும் இலவசமாய்க் கொடுத்துவிடப் படுகின்றது. இலங்கையிற் சில சங்கங்கள் மாத்திரம் தான் மேற்கூறிய உத்தியோகஸ்தர்களைத் தங்கள் செலவில் வைத்துக்கொள்ளத் தக்கதாயிருக்கிறது. ஆகையினால் ஒவ்வொரு சனசமூகம் ஆரோக்கிய அபிவிருத்திக் கழகங்களின் மற்றும் நன்மைகளைக் கவனிக்காமல் விட்டாலும் அவைகளை ஓர் வியாபார தொழிற்போல் அதற்காகத் தேவையான காரியங்களைக் கவனித்துக் கொண்டு வருதல் நன்மையாயிருக்கும். ஒவ்வொரு சனசமூகத்தாரும் அவைகள் தங்களுக்கென ஓர் ஆரோக்கிய அபிவிருத்திக் கழகத்தை ஏற்படுத்திக் கொள்ளாவிட்டாலும் அவர்கள் மூலமாய் அரசாங்கத்தாருக்கு வரும் வருமானத்திலிருந்து தான் மற்றும் இடங்களில் ஆரோக்கிய அபிவிருத்திக் கழகங்கள் ஸ்தாபிக்கப் படுகிறதென்று அறிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு சனசமூகத்தாரும் ஓர் ஆரோக்கிய அபிவிருத்திக் கழகத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியுமா? தங்கள் பாதுகாப்பிலிருக்கும் தாய்மார், குழந்தைகள், சிறுவர், பாலயமானவர்கள் ஆகிய எல்லோருக்கும் அவசியம் தேவையாயுள்ள சுகாதார பாலனம் அதிகம் செலவில்லாமல் பெற்றுக்கொள்ள முடியுமென்பதை அறிந்துகொண்ட பின்பும் ஓர் சனசமூகத்தார் தங்களுக்கென ஓர் ஆரோக்கிய அபிவிருத்திக் கழகத்தை அமைத்துக்கொள்ள முடியாத காரியமா?

#### வழிவகைகள்.

புதினப் பத்திரிகைகள் மூலமாயும் பிரசங்க மேடைகளிலும் ஆரோக்கிய அபிவிருத்திக் கழகங்களால் செய்யப்படும் முயற்சிகளையும் அவைகளின் நன்மையையும் பற்றி எவ்வளவு விளக்கிக் காட்டியபோதிலும் சனங்களின் மனதில் இத்தேசத்திற்குப் பொருத்தமில்லாத அன்னிய முறைகளை உண்டுபண்ணிச் சனங்களை அவைகளின்படி நடந்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவார்களென்றொரு பயம் ஏற்பட்டிருக்கிறது போல் தெரியவருகிறது. அப்படியான எண்ணமொன்றுமே கிடையாது. உலகம் முழுவதற்கும் பொருத்தமுடைய சிற்சில பொதுவிதிகள் சுகாதாரத்தைப் பற்றியிருக்கிறது. இந்தப் பொது விதிகளை மூலாதாரமாய்க் கொண்டே ஆரோக்கிய அபிவிருத்திச் சங்கங்களும் கழகங்களும் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஊரின் தன்மைகளுக்கேற்றபடி சுகாதாரவிதிகள் ஒழுங்கு படுத்தப் பட்டிருக்கின்றன. உதாரணமாக மருத்துவிச்சிமார் ஆரோக்கிய அபிவிருத்திக் கழக முயற்சிகளைச் செவ்வனே நடத்துகிறதற்கு மிகவும் முக்கியமாய்த் தேவையானவர்கள். என் எனில் அவர்கள் தான் தாய்மார்களினதும் குழந்தைகளினதும் சுகாதாரத்தைப் பேணிக்கொள்ள விசேஷ சிரமம் எடுப்பவர்கள். உலகத்தின் சில பாகங்களிலுள்ள ஆரோக்கிய அபிவிருத்திக் கழகங்களில் மருத்துவிச்சிமார்களை வைத்துக்கொள்ளுகிறதில்லையென்றாலும் அப்படிப்பட்ட கழகங்கள் கர்ப்பவதிகளினதும் குழந்தைகளினதும் சுகவாழ்விற்குச் செய்யவேண்டியன வற்றைச் செய்யாமல் விடுவதில்லை. அவர்கள் இதற்குத் தங்கள் ஊருக்குப் பொருத்தமாயுள்ள வேறுவிதமான ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொள்ளுவார்கள். ஒரு கக்கூசாகப்பட்டது சரியான சுகாதார முறைப்படி கட்டிப் பாவிக்கப்பட்டு வந்தால் அது மேலைத்தேச ஒழுங்குப் பிரகாரப்படி கட்டப்பட்டிருந்தாலும் சரி அல்லது கீழைத்தேச ஒழுங்குப் பிரகாரப்படி கட்டப்பட்டிருந்தாலும் சரி அதைப்பற்றி யாதாமொரு வித்தியாசமும் கிடையாது. எது தேவை, எது மிக இலேசாய்ச் செய்து முடிக்கலாம், எது உபயோகமுள்ளது என்று பகுத்தறியும் அறிவே சுகாதார முயற்சிகளை ஏற்படுத்தும் வழிவகைகளைத் தீர்மானித்துக்கொள்ளும்.

ஆசியாக்கண்டம் முழுவதற்கும் பொதுவில் ஒரே ஒரு ஆரோக்கிய அபிவிருத்திக் கழகம் முதன்முதலில் இலங்கைத் தீவிலுள்ள களுத்துறை என்னும் பட்டணத்திற் தான் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அது சரியான முறையில் நடாத்தப்பட்டு வருகிறது. எவராயிருந்தாலும் சரி இந்தக் கழகத்தைப் போய்ப் பார்த்து அங்கு என்ன செய்யப்படுகிறதென்றும் எப்படிச் செய்யப்படுகிறதென்றும் தாமே பார்த்து அறிந்துகொள்ளலாம். அவர் பின்பு தான் கேள்விப்பட்ட வார்த்தையில் மாத்திரம் நம்பியிருக்கத் தேவையில்லை.

இலங்கையில் இந்தத் தலைமுறையில் 63 ஆரோக்கிய அபிவிருத்திக் கழகங்கள் ஸ்தாபித்துக் கொள்வது ஓர் வில்லங்கமான காரியமல்ல இவ்வெண்ணம் நிறைவேறிய பின்பு ஒவ்வொரு சனசமூகத்தாரும் தாமசமின்றிக் கொள்ளை நோய் (Plague) பேதி (Cholera) மலேரியாக் காய்ச்சல் (Malaria) ஆகிய நோய்கள் உண்டு பட்டால் அவைகளைத் தாக்கி வெல்லவும்; காமாலை வியாதி, பறங்கி நோய், க்ஷயரோக வியாதி, நெருப்புக் காய்ச்சல் ஆகிய இந்நோய்களை எதிர்த்துப் போராடி வெல்லவும்; கர்ப்பவதிகளுக்கும் குழந்தைகளுக்கும் வேண்டிய ஆரோக்கிய முறைகளை ஏற்படுத்திக் கொள்ளவும்; பள்ளிக்கூடப் பிள்ளைகளின் சுகாதார சோதனைகளைச் சரியாய் நடத்திக்கொள்ளவும்; மற்றுஞ் சுகாதார விஷயமாயுள்ள பற்பல தேவைகளையும் கவனித்துக் கொள்ளவும்வேண்டிய சுகாதாரம் பார்க்கும் வேலையாட்களைத் தங்களுடன் நிலைபெறாய் வைத்துக்கொள்வார்கள். பின்பு இத்தீவிலுள்ள பட்டணங்களும், கிராமங்களும், நாட்டுப் புறங்களும் இதுவரை உலகதிலுள்ள வேறு எந்தத் தேசமும் அநுபவிக்காத அவ்வளவு சுகவாழ்வை அநுபவித்தற்கு முதற்தரமான சுகாதார பாலனம் கிடைத்தவைகளாயிருக்கும். இவ்விதமான நோக்கத்தை நிறைவேற்ற வேணுமென்றால் ஒவ்வொரு ஆரோக்கிய அபிவிருத்திக் கழகத்திலும் வேலை பார்க்கும் ஒவ்வொரு உத்தியோகஸ்தனும் தன் கடமைகளைச் சரிவரப் பார்த்துக் கொண்டும் அவையினால் வரும் நன்மைகளைப் பெறவிருக்கும் சனங்களும் தங்கள் முழுமனத்தோடும் ஒத்துழைத்துக்கொண்டும் வரவேண்டும்.

---

## வேண்டிச் செய்கை.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

8. பசளை:—மாட்டின் எரு அல்லது ஆட்டெரு இட்டு நிலத்தை நன்றாக எருப்படுத்த வேண்டும். வெண்டிப்பயிர் செய்யு நிலத்திலே மாட்டுப்பட்டியடைத்தல் அல்லது ஆட்டுப்பட்டியடைத்தல் மிக விசேஷம் ஏனெனில் அதனால் விசேஷ பசளையாகிய அவைகளின் மூத்திரம் நிலத்திலேசேரும். பசளையிட்டபின் நிலத்தைக் கொத்தி அல்லது உழுது பசளைகளை மறைத்துவிடவேண்டும். இவைகள் கிடையாதபட்சத்தில் உப்புவாயுப் பசளைகள் சாம்பற்காரப் பசளைகள் நிபாக்கினிப் பசளைகள் மூன்றும் நிலத்திலே சேரும்படி வேறு பசளைகளைத் தேடி யிடவேண்டும். அதற்கேற்ற பசளைகளாவன:—உப்புவாயுவை அதிகரிக்கச்செய்தற்குச் சணல், டெயிசா, காவினாய் முதலிய நெற்றின் பயிர்களை நிலத்திலே யுண்டாக்கிப் பூக்கும் பக்குவத்தில் நிலத்திற் புதைத்துவிடலாம். அல்லது உப்புவாயுப் பசளைகளாகிய "சோடியம் னைற்றிறேட்" இருப்பு முதலிய வியாபாரப் பசளைகளை யிடலாம். சாம்பற்காரத்தை மரச்சாம்பல் முதலியவற்றினால் வருவிக்கலாம். நிபாக்கினியை எலும்புப்பசளை இரத்தப்பசளை பிண்ணாக்குவகைகள் பேசிச்சிலாக் முதலியவற்றாலுண்டாக்கலாம்.

9. பசளையிடுங்காலம்:—சில பசளைகள் உட்கிப் பயிர்களின் வேர்களாலெடுக்கப்படும் பக்குவத்துக்கு வரக் கனகாலஞ் செல்லும். சில பசளைகள் கொஞ்சக்காலத்திலே உட்கிப் பயிருணவாகும். சில உடனேயும் பயிருணவாகும். அந்தப்பசளைகள் உட்க எவ்வளவுகாலஞ் செல்லுமோ அவ்வளவுகாலத்துக்கு முன் நிலத்திலே பசளையிட்டுப் பின் பயிர் உண்டாக்கவேண்டும். எருப்பசளைகளை ஒருமாசத்துக்கு முன் இடலாம். எலும்புப்பசளைகளை 6 மாசத்துக்கு முன் இடவேண்டும். மூத்திரப் பசளையை உடனுக்குடனே இடவேண்டும். தண்ணீருடன் கலந்தே அவற்றைப் பாவிக்க வேண்டும்.

10. களைகளையகற்றல்:— களைகள் வளர்ந்து பரவாதபடி அடிக்கடி அவைகளை யழிக்கவேண்டும். அல்லாவிட்டால் (1) அவை பயிருணவுகளாகிய பசளைகளிலும் தண்ணீரிலும் பங்குபற்றும்; (2) பயிர்களின் வேர்களை லேசாகச் செல்லவிடா; (3) காற்றுச் சூரிய வெளிச்சம் முதலியவை பயிரிலே லேசாகப் படவிடா; "களைபிடுங்காத பயிர் கால்பயிர்" என்பது பழமொழி.

11. இடைவெளி:—ஒவ்வொரு கன்றுக்கும் இடைவெளி $2\frac{1}{2}$ அடிமுதல் $3\frac{1}{2}$ அடியாயிருக்கவேண்டும். இடைவெளியைத் தீர்க்கும்போது நிலத்தின் திறத்தையும் இட்ட பசளைத் திறத்தையும் நோக்கியே தீர்மானிக்க வேண்டும். இவை குறைவாயிருந்தால் $2\frac{1}{2}$ அடி 3 அடி இடைவெளி விட்டும் சமமாயிருந்தால் $3\frac{1}{2}$ அடி இடைவெளி விட்டும் கன்றுகளை நாட்டவேண்டும்.

12. மரங்களின் தொகை:— சிலர் ஒவ்வொரு கன்றுகள் ஒரு இடத்தில் நிற்க விடுவர் சிலர் இவ்விரு கன்றுகள் நிற்க விடுவர். ஒவ்வொரு கன்றுகள் நிற்க விடுவதே விசேஷம். $2\frac{1}{2}$ அடி இடைவெளி விட்டு நடுகில் ஒற்றையாக நடுகில் ஒரு ஏக்கர் நிலத்தில் 6969 கன்றுகளும் இரட்டையாக நடுகில் 13938 கன்றுகளும்; 3 அடி இடைவெளி விட்டு நடுகில் ஒற்றையாக நடுகில் 4840 கன்றுகளும் இரட்டையாக நடுகில் 9680 கன்றுகளும்; $3\frac{1}{2}$ அடி இடைவெளி விட்டு நடுகில் ஒற்றையாக நடுகில 3555 கன்றுகளும் இரட்டையாக நடுகில் 7110 கன்றுகளும் உண்டாக்கலாம். இடைவெளிப் பரப்பு 4 கன்றுகட்கிடையில் எவ்வளவாயிருக்கிறது என்று முதற்பார்த்து அப்படி எத்தனை துண்டுகள் ஒரு ஏக்கரில் உண்டோ அத்தனை கன்றுகள் என்று தீர்மானிக்கவேண்டும். இக்கணக்கு ஒற்றையாக உண்டாக்கினாலே சரிவரும். இரட்டையாக உண்டாக்குகில் 2ஆற் பெருக்கியும், மும்மூன்றாக உண்டாக்குகில் 3ஆற் பெருக்கியும் அறிய வேண்டும்.

13. விர்த்தியாக்கல்:— விதைகளினாலேயே வெண்டிப்பயிரை விர்த்திக்க வேண்டும்.

14. குழிகள்:—ஆறு அங்குல வட்டமான இடத்திலே மூன்று அங்குல ஆழத்திலே பயிர் உண்டாக்கவேண்டும்.

15. நடுகை:—தோண்டப்பட்ட குழிகளிலே குறிக்கு 4 அல்லது 5 விதைகளைப் புதைத்துவிட வேண்டும். பின்பு அவை முளைத்து வளர்ந்தபின் நல்லவைகளாய் ஒவ்வொன்றை அல்லது இவ்விரண்டை நிற்க விட்டு எச்சமான கன்றுகளைப் பிடுங்கி வீசிவிட வேண்டும்.

16. நடுகை ஆழம்:—வெண்டி விதைகளின் விட்டத்தின் 4 மடங்கு ஆழத்தில் விதைகளை நிலத்திலே குழிகளிலே புதைக்கவேண்டும். அதாவது முக்கால் இஞ்ச ஆழத்திலே புதைக்கலாம்.

17. விதைகள் (Seeds):—"தாயைப் போலப் பிள்ளை" என்றும் "தந்தையைப்போலிருப்பான் மைந்தன்" என்றும் நம்மவர் பழமொழியாகக் கூறுவர். அதுபோல் விதைக்குத் தக்கபடியே பயிர்களுமிருக்கும். காய்களை மரத்திலே நன்றாக முற்றவிட்டு அவற்றிலிருந்து விதைகளை யெடுக்கவேண்டும். நோய் பிடியாததும் நன்றாகச்செழித்து வளர்ந்ததுமானமரத்திலிருந்து விதைகளை யெடுக்கவேண்டும்; பின் அவைகளை நன்றாகக் காயவைத்துப் பூச்சிகள் வண்டுகள் அவற்றைப் பழுதாக்காதபடி சீலைத்துண்டிலே போட்டுக் கட்டி அடுக்களையிலே புகையிலே தூக்கிவிடவேண்டும். அன்றேல் தார் மேலுக்குப்பூசப்பட்ட தகரப் பாத்திரங்களிலே சேமித்து வைத்திருக்கவேண்டும். "சிக்கிறட்டின்" அலது கற்பூரம்போட்ட தகரப் பாத்திரம் அல்லது வேறு சிறு தகரப் பாத்திரங்கள் இதற்காக உபயோகிக்கப்படலாம்.

18. விதைகளைத் தெரிதல் (Seed selection):—ஊரிலே நல்ல உத்தமமான விதைகளைத் தேடி நல்ல நிலத்திலே நல்ல பசளை போட்டு இப்பயிரை உண்டாக்க நல்ல செய்கை செய்து அவற்றிலே திறமான பயிர்களிலிருந்து விதைகளை எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும், மறுவருஷம் அந்த விதைகளிலிருந்து அவ்வாறே பயிரையுண்டாக்கி மேற்கூறியபடி அவற்றிலிருந்து திறமான பயிர்களில் விதையைத் தேடவேண்டும். இப்படி வருஷவீதம் செய்துகொண்டுவர வருஷவீதம் காயின் தொகையும், காயின் பருப்பமும் மற்றும் சகல லட்சணங்களும் கூடிக்கொண்டே வரும். ஐந்தாம் ஆறாம் வருஷத்தில் மெத்தக் கூடிய வரும்படியை எடுக்கலாம். இதைக் கமக்காரர் எல்லாப் பயிர்ச் செய்கையிலுங் கவனித்துக்கொண்டு வருவார்களானாற் கமத்தொழிலிலே உத்தம பலனை யடைவார்களென்பதற்கையமில்லை.

19. நீர்ப்பாய்ச்சல்:— நீர்ப்பாச்சுதலினாலே நிலம் முழுவதையும் மூடித் தண்ணீரால் மறைத்து விடுவது அவ்வளவு புத்தியல்ல, அதனாலே எவ்வளவோ தண்ணீர் வீணாக ஆவியாய்ப் போய்விடும். நிலத்துட் காற்றுச் செல்லாதபடி அச்செய்கை நிலத்தையும் இறுக்கிவிடும். தண்ணீர் நிலத்திலே ஊறிப்பிடித்தாற் போதும்; அதற்காக இருநிரைகட்குப் பொதுவாக ஒரு வாய்க்காலைக் கிறி அதிலே தண்ணீரை விட்டு நிறைத்து மண்ணினால் அல்லது, கஞ்சல் குப்பைகளினால் அல்லது உமியினால் அல்லது தேங்காயிலிருக்கும் மேற் தோலாகிய கதம்பைகளினால் மூடி விடலாம். அதனால் ஈரக்காய்ந்துதண்ணீர் அவம்போகாது இரண்டு நிரைகளுக்கும் ஊறிப்பிடிக்கும். இப்படியே மற்ற நிரைகட்கும் வாய்க்கால்கள் கிறித் தண்ணீர் விடவேண்டும். வாய்க்கால்களின் அகலம் $\frac{1}{2}$ முழமும் ஆழம் $\frac{1}{2}$ முழமுமாக இருக்கலாம்.

20. காலம்:— இப்பயிரை மாரி காலத்திலேயே உண்டாக்க வேண்டும். புரட்டாதி ஐப்பசி மாதங்களிலே விதைகளை நடத் தொடங்கலாம்.

21. விளைவின் அடையாளங்கள்:— காயைக் கையாலே முரிக்கும்போது இலேசிலே முரிபடுமாயின் அது கறிக்கு ஆயப்பருவமான காலமாகும். காயின் தோலிலே நார்த்தன்மை வந்தபின் அது கறிக்குதவாது.

22. வயது (Age):—இது எட்டு ஒன்பது மாசப் பயிராகும்.

23. பலன் பெறுங் காலம்:— இது இரண்டு இரண்டரை மாசத்திலே காய்க்கத் தொடங்கிவிடும்; அதன்பின் பலன் பெறலாம்.

நல்லூர்,
27—8—28.

சி. கி. கதிரேசபிள்ளை.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.